# எந்தநாள் காண்போம் இனி


நண்பர் மோதி ராஜகோபால் காலமாகிவிட்டார். இந்தச் செய்தியைக் கேட்டு நான் அதிர்ச்சியடையவில்லை; மனம் கலங்கினேன். அந்தக் கலக்கம் நாளுக்குநாள் அவர் நினைவால் பெருகுவதன்றிக் குறையக் காணோம். என்னால் அழ முடியாது. மரணம் போன்ற துயரங்கள், அழுதால் தீருவதில்லை என்கிற அறிவு இருப்பதால், எந்த மரணத்துக்கும் நான் அழுவதில்லை சிலரது இழப்புகள் நம்மில் ஒருபாகத்தை நாம் இழந்தது போன்ற உணர்வைத் தருகின்றன! அவ்வித இழப்புகளில் ஒன்று மோதியின் மரணம்.

அவரை அறிந்தவர்கள் எல்லாம் அவரது சீலங்களையும் பண்புகளையும் அறிவர். நல்ல மகன். நல்ல தந்தை. நல்ல நண்பர். அன்பு நிறைய உடையவர். அன்பர்களைத் தேடி அணைத்துக் கொள்பவர். நல்ல இலக்கியங்களால் தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டவர்!

என் மீது பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவர். சிந்தை குளிரச் சிரித்தொளிரும் உன் முகத்தை எந்தநாள் காண்பேன் இனி... என்று என் மனம் மோதியின் மரணச் செய்தி கேட்டது முதல் கலங்கிப் புலம்பிக் கொண்டிருக்கிறது. இதற்கு ஆறுதல் ஏது?

என்னிலும் வயது குறைந்த நண்பர்களை இழக்கும்தோறும் எனக்கு ஏனோ ஒருகுற்ற உணர்ச்சி உறுத்துகிறது. ''நமக்கும் அதுவழியேநாம் போம் அளவும், எமக்குஎன்னஎன்று இட்டு உண்டு இடும்" என்பதும் அவ்வைப் பாட்டி நமக்கெல்லாம் கூறிய அறிவுரை! எதையும் ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை.

நமது நினைவில் இனி மோதி நிரந்தரமாய் வாழ்வார். அவரது குடும்பத்தினருக்கு நாம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு ஆறுதல் கூறுவதா, அல்லது அவரது குடும்பத்தினர் அவரை இழந்து வாடும் நண்பர்களுக்கு ஆறுதல் தெரிவிப்பதா?



காவிரியும் சீரங்கமும் கொள்ளிடக்கரையும் திருவானக்காவும் இனி எனக்கு வெறிச்சோடிக் கிடக்கும். இன்னும் ஒருக்கால் அங்கெல்லாம் ஏகிடில் இந்த ஏழை மனம் என்படுமோ?

- திரு. ஜெயகாந்தன்